# ஆயுர்வேதத்தின் சிகிச்சை முறை

நோயாளியை எவ்வாறு பரீட்சை செய்ய வேண்டும், நோயை எவ்வாறு பரீட்ச்சை செய்ய வேண்டும்? என்ற விபரத்தை ஆயுர்வேதம் இவ்வாறு விளக்குகிறது_

நோயாளியைக் கண்ணால் பார்த்தும், உடலைத் தொட்டும், சில கேள்விகள் கேட்டும் நோயைச் சோதிக்க வேண்டும். நோய்தோன்றக்காரணம், வரப்போகும் நோயின் முற்குறி, நோய் தோன்றிய பின் அதன் இயற்கைக் குறிகள், நோய் நீங்கும் வகை, நோய் உடலில் பரவும் வகை ஆகியவைகளால் நோயைச் சோதிக்க வேண்டும்.

தேசம் என்று ஒரு சமாச்சாரம் இருக்கிறது- பூமி, தேசம்-

| | |
|---|---|
| ஜாங்கலம் | (காட்டுப் பகுதி) |
| அநுபம் | (ஜலமயமான இடம்) |
| சாதாரணம் | (இரண்டும் கலந்தது) |

என மூன்று வகையாகும். காட்டில் தோன்றிய மூலிகைகளில் வாதம் முக்கியமாக இருக்கும். அநுபத்தில் கபம் அதிகம். இவற்றிற்கு இடையிலானது சாதாரணமெனப்படும்.

மருந்தைக் கொடுக்க வேண்டிய காலம் மற்றும் மருந்தின் வகைகளைப் பற்றி கூறுமிடத்தில்-

நோயாளிக்குச் சிகிச்சை செய்யும் போது 'காலம்' என்ற சொல் இரு பொருளில் பயன் படுத்தப்படுகிறது.

ஒன்று, உஷ்ணம், முகூர்த்தம் முதலியவற்றில், நோயின் நிலையை அறிவிக்க, மற்றொன்று இவ்விரண்டும் நோயாளிக்கு மருந்து கொடுக்க என இரு பொருளில் பயன்படும். மருந்தளிப்பது இரு வகையாகும். ஒன்று சோதனம்(மருந்து கொடுத்து

உடலுக்குள்ளிருந்து சீற்றமடைந்த தோஷங்களை வெளியில் வரச்செய்வது) இரண்டாவது சமனம்(உடலுக்குள்ளேயே சீற்றமடைந்த) தோஷங்களைத் தணித்து நிறுத்திவிடுதல்).

- <u>வஸ்தி</u>

ஏதேனுமொரு கருவியினால் ஆசனத்துவாரத்தின் வழியாக தைலம் முதலியவற்றைச் செலுத்தி, குடலைக் கழுவதற்கான முயற்சியானது வஸ்தி எனப் படும் – வாதம் (சீற்றமடைந்த) இதனால் தணிகிறது.

- <u>விரேசனம்</u>

மலத்தை வெளியில் கொண்டு வரும் மருந்து – சீற்றமடைந்த பித்தம் இதன்மூலம் வெளியேறுகிறது.

- <u>வமனம்</u>

வாந்தி செய்து இரைப்பையை சுத்தம் செய்தல் – சீற்றமடைந்த கபம் வெளியேறுகிறது.

இம்மூன்றும் உடலில் சீற்றமுற்ற தோஷங்களுக்கு முறையே உயர்ந்த சோதனம் ( சுத்தி முறைகள்) ஆகின்றன. அதுபோலவே வாதத்தை அடக்குவதில் உயர்ந்தது எண்ணெய், பிதத்தை அடக்குவதில் உயர்ந்தது நெய், கபத்தை அடக்குவதில் உயர்ந்தது தேன். இங்கு அடக்குவது என்றால் சமனம் என்ற சம்ஸ்கிருத பதத்திற்கான தமிழ் விளக்கமாகும்.